செ.வெ.எண் :017 நாள்: 09.01.2022

# பத்திரிக்கை செய்தி

**தஞ்சாவூர் மாவட்டத்தில் 2021-2022–ம் ஆண்டு வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படவுள்ளன. விவசாயிகள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் அழைப்பு.**

விவசாயத்தில் வேலையாட்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து குறித்த காலத்தில் பயிர்சாகுபடி செய்திடவும் விவசாயிகளின் நிகர லாபத்தினை உயர்த்திடவும் வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம் தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு 2021-22-ம் நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மறுமதிப்பீடு (Revalidation) அரசாணையின்படி பெறப்பட்டுள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தனிப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

இதன்படி, அதிகபட்சமாக உழுவை இயந்திரங்களுக்கு ரூ.2.50 லட்சம் முதல் 4.20 லட்சம் வரையிலும், சிறிய வகை உழவு இயந்திரம் (பவர் டில்லர்)-க்கு ரூ.0.70 லட்சம் முதல் 0.85 லட்சம் வரையிலும், சுழற் கலப்பைகளுக்கு ரூ.0.42 லட்சம் முதல் 0.45 லட்சம் வரையிலும் ட்ரைலர்களுக்கு அதிகபட்சமாக 0.75 லட்சம் வரையிலும், தெளிப்பான்களுக்கு 0.031 லட்சம் முதல் 0.038 லட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு தாழ்த்தப்பட்ட மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியம் பின் ஏற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

தற்பொழுது, இத்திட்டத்திற்கு தனிப்பட்ட வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மானியத்தில் பெற்றிட ஏதுவாக பொதுப்பிரிவினருக்கு உழுவை இயந்திரங்கள் - 7 எண்களும், பவர் டில்லர் - 23 எண்களும், சுழற் கலப்பை - 2 எண்களும், ட்ரைலர் – 1 எண்ணும் தெளிப்பான்கள் - 6 எண்களும் ஆக கூடுதலாக 39 எண்கள் ரூ.49.36 லட்சம் மானியத்திலும், சிறப்பு கூறு பிரிவினர்களுக்கு உழுவை இயந்திரம் - 1 எண், பவர் டில்லர் - 7 எண்களும், சுழற் கலப்பை - 1 எண், தெளிப்பான்கள் - 6 எண்களும் ஆக கூடுதலாக 15 எண்கள் ரூ.9.57 இலட்சம் மானியத்திலும் வாங்கிக் கொள்ள நடப்பாண்டில் மொத்தம் ரூ.58.93 இலட்சம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தினை உழவன் செயலியில் பதிவு செய்து தொடர்ந்து மத்திய அரசின் இணையதளமான **www.agrimachinery.nic.in** மூலமாக பதிவு செய்தும் மூதுரிமை அடிப்படையில் பின்னேற்பு மானியம் பெற்று பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**